[பேரவைத் தலைவர்] [2021 ஜூன் 24

பேரவை விதி 213–ன்கீழ், திரு. S.R. இராஜா அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமனம் செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–50

(ஈ) அவை உரிமைக் குழு

2021–2022 ஆம் ஆண்டிற்கான அவை உரிமைக் குழுவிற்கு (Committee on Privileges) பேரவையின் பதினான்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். கீழ்க்காணும் பதினான்கு உறுப்பினர்களிடமிருந்து முறைப்படியான வேட்புத்தாள்கள் வரப்பெற்றுள்ளன:

1. முனைவர் த. இனிகோ இருதயராஜ்
2. திரு. J.L. ஈஸ்வரப்பன்
3. திரு. இ. கருணாநிதி
4. திரு. ச. சிவகுமார்
5. திரு. மா. சின்னதுரை
6. திரு. அ. சௌந்தரபாண்டியன்
7. திரு. A. நல்லதம்பி
8. திரு. ஜே.ஜி. பிரின்ஸ்
9. திரு. மு. பாபு
10. திரு. பால் மனோஜ் பாண்டியன்
11. முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்
12. திரு. G.V. மார்க்கண்டேயன்
13. திரு. இ.மா. மான்ராஜ்
14. திரு. சபா. ராசேந்திரன்

நியமனம் செய்யப் பெற்றுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பெற வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச்

2021 ஜூன் 24] [பேரவைத் தலைவர்]

சமமாக இருப்பதால், 2021–2022 ஆம் ஆண்டிற்கான அவை உரிமைக் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பெற்றதாக அறிவிக்கின்றேன்.

மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் மற்றும் பேரவை முன்னவர், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர், பேரவை எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்களாக இருப்பார்கள்.

பேரவை விதி 227(3)–ன்கீழ், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் இக்குழுவின் தலைவராக இருப்பார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

4. அரசினர் தீர்மானம்

பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறக் கோரும் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *அதைச் சொல்லக் கூடாது. நான்தான் சொல்ல வேண்டும். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"பேரவை விதி 25 (1)–ன்படி, பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறலாம்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.